PR/2018/28/t

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை
தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

செப்டம்பர் 13, 2018

## ஜப்பானிய கலாசாரக் கண்காட்சி-2018

ஜப்பானிய கலாசாரக் கண்காட்சியொன்று செப்டம்பர் 15ம் மற்றும் 16ம் திகதிகளில் கொழும்பு 03ல் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கையிலுள்ள ஜப்பானிய மொழி ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து ஜப்பானியத் தூதரகம் இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

Ikebana இக்கிபானா ( மலர்களை ஒழுங்கமைத்தல்) Origami ஒரிகாமி ( கடதாசிகளை மடித்தல்) Bonsai பொன்சாய் ( சிறிய தோற்றத்தையுடைய பெருமரங்களை உருவாக்கல்) போன்றன காட்சிக்கு வைக்கப்படுவதுடன் அவை குறித்த செயன்முறை விளக்கம் கீழே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிநிரலுக்கு அமைய இடம்பெறும். மேலும் ஜப்பானில் இருந்து வருகைதரும் ஜப்பானிய தேநீர் நிபுணரின் கைவண்ணத்தில் விசேட தேநீர் சடங்கும் இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி 2018 செப்டம்பர் 15ம்திகதி பிற்பகல் 12.00 மணி முதல் மாலை 6.00 மணிவரையும் செப்டம்பர் 16 காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையிலும் பொதுமக்களுக்காக திறந்திருக்கும். கண்காட்சிக்கான அனுமதி **முற்றிலும் இலவசம்.**

**செயன்முறை விளக்கம்**

| | | | |
|---|---|---|---|
| தேநீர் சடங்கு | - | 15 செப்டம்பர் | 1:30 p.m. ~ 2:30 p.m. |
| | | 16 செப்டம்பர் | 10.00 a.m.~11.00 a.m. |
| இக்கிபானா | - | 15 செப்டம்பர் | 3:00 p.m. ~ 4:00 p.m. |
| | | 16 செப்டம்பர் | 2:15p.m. ~ 3:15 p.m. |
| ஒரிகாமி | - | 15 செப்டம்பர் | 4:15 p.m. ~ 5:15 p.m. |
| | | 16 செப்டம்பர் | 3:30 p.m. ~ 4:30 p.m. |
| பொன்சாய் | - | 16 செப்டம்பர் | 1.00 p.m. ~ 2.00 p.m. |

இந்தக் கண்காட்சியானது ஜப்பானின் கலாசாரத்தையும் வாழ்க்கை முறையையும் எடுத்துக்காட்டும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இலங்கைக்கும் ஜப்பானிய மக்களுக்கும் இடையிலான நட்புறவு மேலும் மேம்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

PR/2018/28/t

***

மேலதீக விபரங்களுக்காக கலாசார பகுதியை தயதுசெய்து தொடர்புகொள்ளுங்கள்
தொலைபேசி: 011-269-3831~3 (ext.266)